(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 1(9).]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2009, செத்தெம்பர் 18, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2009, ஒற்றோபர் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0125 / ’09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரசாங்க ஊழியர்களுக்கு காணிகளைக் கொள்வனவு செய்வதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் சலுகை வட்டி அடிப்படையிலான கடன் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா

(ii) அவ்வாறாயின் இக்கடன் திட்டத்தின் கீழ் எவ்வளவு கடன் தொகை வழங்க்கப்பட்டுள்ளது,

(iii) இதன் கீழ் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை வங்கியினால் எவ்வளவு தொகை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது,

(iv) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் வெவ்வெறாக எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(ii) 2008 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது,

(iii) இவ்வாண்டில் எத்தனை பேருக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரச ஊழியர்களில் பெருந்தொகையானோருக்கு இக்கடனைப் பெற முடியா துள்ளதால் அநீதி ஏற்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0128 / ’09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பயிற்சி பெற்ற ஊழியர்களை வெளிநாட்டுத் தொழில்களுக்கு ஆற்றுப்படுத்து வதற்கான அரச வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா,

(ii) அவ்வாறாயின், 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் எத்தனை பேர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்,

(iii) இது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கென வெளியேறுபவர்களில் எத்தனை சதவீதத்தினர்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தாதிமார்களைப் பயிற்றுவித்து வெளிநாட்டு வேலைவைாய்ப்புக்கு ஆற்றுப் படுத்துவதற்காக 2007 ஆம் ஆண்டில் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறான பயிற்சி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அதற்கென எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது,

(ii) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வெவ்வேறாக பயிற்சித் தாதிமார்கள் எத்தனை பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள் ளனர்,

(iii) அந் நாடுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0275 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,—- போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டு அறிக்கைகளின் பிரகாரம் அரசாங்க கடமைகளுக்கும் தனிப்பட்ட அலுவல்களுக்கும் வாகனங்களைப் பயன்படுத்திய புகையிரத திணைக்களத்தைச் சேர்ந்த 4 பேர் 2006 யூலை 14ஆம் திகதிய 11/2006ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு முரணாக தமக்குரிய எரிபொருள் வரையறையைக் கடந்து பயன்படுத்தியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 6402 லீட்டர் எரிபொருளை மேலதிகமாகப் பயன்படுத்தியுள்ள மேற்படி உத்தியோகத்தர்கள் யார்,

(ii) இவர்களின் கடமைகள் யாவை,

(iii) வரையறையைக் கடந்து பயன்படுத்தியுள்ள எரிபொருளின் நிதி ரீதியிலான பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0288/ ' 09

கௌரவ எம் .ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—-

(அ) (i) 1996ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்குப் பதவியுயர்வு பெற்ற புகையிரத நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. சி. டப்ளியு. ஆர். பர்னாந்து உள்ளிட்ட சிலருக்கு 7 சம்பள ஏற்றங்களில் முரண்பாடுள்ளதென்பதையும்,

(ii) இற்றைவரை அதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்,

(ஆ) 1994.02.11ஆம் திகதிய 11/94ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தின் 5.3.1.ஆம் பிரிவையும் 2/97(111) சம்பள மாற்றத்தையும் சரியாக நடைமுறைப்படுத்தாமையால் 2 சம்பள ஏற்றங்களை இழந்து, 1994.08.01ஆம் திகதி முதல் 1999.11.11ஆம் திகதி வரை ஒரே சம்பளத்தில் இருந்த இவர்களுக்கு 7/2003ஆம் இலக்க பொ.நி.சு. பிரகாரம் 1997,1998, 1999 ஆகிய மூன்று வருடங்களுக்குரிய 3 சம்பள் ஏற்றங்களை கிடைக்காமற் செய்திருப்பது எவ்வாறு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்டவர்களை விட மூன்று ஆண்டுகளின் பின்னர் பதவியுயர்வு பெற்ற, மூப்புரிமையில் 3 ஆண்டுகள் குறைந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் சம்பளத்தைவிட 3 சம்பள ஏற்றங்கள் உயர்வாக வைக்கப்பட்டிருப்பது எந்த அடிப்படையில்,

(ii) இது 11/94 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபத்தை மீறி மூப்புரிமையை அலட்சியப் படுத்தியதாக அமையாதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0358 / '09

கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தொழில் உறவுகள், மனித வலு அமைச்சின் கீழ் மாவட்ட தொழில் அலுவலகங்கங்களில் நிறுவப்பட்டுள்ள “ரெகியா பியஸ” நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவற்றின் மூலம் வெளிநாட்டு தெரழில்களுக்கு அனுப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முக பரீட்சைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி நேர்முக பரீட்சைகளில் கலந்து கொண்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) இவர்களில் வெளிநாட்டு தொழில்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள வர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) இவர்களின் பெயர் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு தொழிலுக்காக ஒருவரிடமிருந்து அறவிட்ட பணம் எவ்வளவு,

(ii) ஏற்கனவே பணம் செலுத்தியுள்ளவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை “ஜொப்ஸ் நெட்” நிறுவனம் தொழில் உறவுகள் மனித வலு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா,

(ii) அதன் முகாமையாளர்கள், பணிப்பாளர்கள் சபையும் பதிவு எண்ணும் யாது,

(iii) அது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டிருந்தால் பதிவு எண் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0362 / ’09

கௌரவ ஆர்.எம். காமினி ரத்நாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கேகாலை மாவட்டத்திற்கு இம்முறை சிறுபோகத்திற்காக வழங்கப்படுகிற உர மானியத்தின் பொருட்டு அனுப்பல் கட்டளை வழங்கப்பட்டுள்ள உர வகைகளின் அளவு எவ்வளவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பயிர் செய்து சுமார் ஒரு மாதம் கழிந்தும் இன்னும் கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு மேற்படி மானிய உரம் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறு கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு உரம் கிடைப்பது தாமதமான தற்கான காரணம் யாது,

(ii) கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு உரம் ஏற்றிச் செல்வதற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின் அது எப்போது,

(iii) உரம் ஏற்றிச் செல்லல் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது,

(iv) அந்நிறுவனத்தின் பெயர், முகவரி யாது

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு மானிய உரம் கிடைக்காததன் காரணமாக ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளிலிருந்து ஆகக் கூடிய பயனைப் பெறுவதற்காகவும் மேற்கொள்ளப் படும் நடவடிக்கையாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0464 / ’09

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்ற நகர சபைகள், பிரதேச சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் 2006 ,2007,2008 மற்றும் 2009 ஆம் வருடங்களுக்கான பாதுகாப்பு வருமானம் மற்றும் பொது வருமானம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்கள் குறிப்பிட்ட வருடங்களில் அரசாங்க அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், கடன் வழங்கிய நிறுவனம், கடன் நிபந்தனை, பெற்றுக் கொண்டுள்ள கடன் தொகை மற்றும் அப்பணம் இடப்பட்டுள்ள கருத்திட்டம் தனித் தனியாக யாதென்பதையும் ,

(iii) ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனமும் வருடாந்தம் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை, கடன் தவணைத் தொகை மற்றும் வட்டி தனித் தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0488 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iv) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்,

(v) வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களாக மாறும் பொருட்டு இவர்களிடமிருந்த அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்த வர்த்தக நிலையங்களை பேணிவருகின்றவர்கள் அவற்றின் ஆரம்ப உரிமையாளர்களா என்பதையும்,

(ii) எவரேனுமொருவருக்குச் சாட்டப்பட்டிருந்தால் அது யாரால் யாருக்கு என்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய மாதாந்த குத்தகைத் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) குத்தகை தொகை யாரால் அறவிடப்படுகின்றதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0500/ '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) "மஹிந்த சிந்தனை" கொள்கைப் பிரகடனத்தின் 48 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு, சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பாரிய அளவிலான கைத்தொழிற்சாலையொன்று உருவாகும் வகையில் 300 புதிய கைத்தொழிற்சாலைகளை தாபிக்கும் திட்டத்தின் கீழ் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கைத்தொழிற்சாலைகளும் அவை நிர்மாணிக்கப்பட்டள்ள பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0511 / '09

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கா/தவலம பிரதேச செயலாளர் பிரிவில் பனங்கல கங்காராம விஹாரைக்கு அருகில் கிங்கங்கையை கடப்பதற்காக பாலமொன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்போதைய பிரதமரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமாக இருந்த தற்போதைய ஜனாதிபதி அதற்கான அடிக்கல்லை நாட்டினார் என்பதையும்,

(ii) அந்த அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது 05 வருடங்கள் கடந்துள்ளது என்பதையும்,

(iii) கங்காராம விஹாரையில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் கிராமத்தவர்களுக்கு ஆற்றை கடப்பதற்கும் பனங்கல மகாபோதி வித்தியால யத்துக்கும் வரும் பாடசாலை மாணவர்களுக்கு ஆற்றை கடப்பதற்கும் இந்த பாலம் தேவை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இப்பாலத்தின் நிர்மாணப்பணிகள் எக்கால கட்டத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0533 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஜூலை 01, 2002 ஜூலை 01, 1995 ஜூலை 01 ஆகிய திகதிகளில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் இயங்கிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இன்றைய தினத்திலுள்ளவாறு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலு முள்ள வைத்தியர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகையை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வைத்தியர் — நோயாளிகள் விகிதம் என்ன என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களாக ஆண்டுதோறும் வைத்தியசாலைகளுக்கு அனுமதி பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0534 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஜூலை 1

2002 ஜூலை 1

1995 ஜூலை 1

ஆகிய தகதிகளில் மாகாண மட்டங்களிலும், தேசிய மட்டத்திலும் இயங்கிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இன்றைய தினத்திலுள்ளவாறு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலு முள்ள ஆசிரியர்களது எண்ணிக்கை எவ்வளவென்பதையும் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தொகை எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) ஆசிரிய, மாணவ விகிதம் என்னவென்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த ஐந்து வருடங்களாக ஆண்டுதோறும் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஒற்றோபர் 08, வியாழக்கிழமை)**

0116 / '09

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 05 எனக் கொள்ளப்படுகின்ற அநுராதபுரம், பொலநறுவை, வவுனியா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008, 2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர்குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0117 / '09

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல்,தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 03 எனக் கொள்ளப்படுகின்ற குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008,2009 ஆண்டுகளில் தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப் பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தியுள்ள மொத்த தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி கருத்திட்டங்களின் மூலமாக நலன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வள வென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0462 / '09

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரினால் வரிச் சலுகையின் கீழ் வழங்கப்பட்டுள்ள வாகன இறக்குமதிக்கான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர்கள், வாகனத்தின் வகை மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி வாகனங்களின் உற்பத்திப் பெறுமதி மற்றும் தற்போதைய சந்தைப் பெறுமதி யாதென்பதையும் ,

(ii) இதன் மூலம் எமது நாட்டுக்கு கிடைத்த வரி வருமானம் எவ்வள வென்பதையும் ,

(iii) இழந்துள்ள வரி வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

---

## 2009, ஒற்றோபர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0501 / '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,--

(அ) (i) "மஹிந்த சிந்தனை" கொள்கைப் பிரகடனத்தின் 43 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) "வெவில்லட்ட நவோதயக்" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளவாறு, மூடப்படும் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுத்துள்ள தேயிலைக் கைத்தொழிற்சாலைகளுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுத்து நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமெனவும்,

(ii) இக்கைத்தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படுமெனவும், குறிப்பிடப்பட்டுள்ளன என்பதை

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மூடப்படும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளதென 2005 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் பின்னர் இனங்காணப்பட்டுள்ள கைத்தொழில்சாலைகள் யாவையென்பதையும்,

(ii) இக் கைத்தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி வசதிகள் மற்றும் அவற்றின் பெறுமதி என்னவென்பதையும்,

(iii) வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0536 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உருக்குக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்ட திகதியையும்,

(ii) தனியார் மயப்படுத்தலின்போதிருந்த ஊழியர்களின் எண்ணிக்கையையும்,

(iii) அந்த அரச நிறுவனத்தை அப்போது கொள்வனவு நபர் யாரென்பதையும்,

(iv) அரசாங்கத்திற்கு அவர் செலுத்திய தொகையையும்,

(v) இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரிகளின் அளவையும்,

(vi) அதன் தற்போதைய உரிமையாளரையும்,

(vii) தற்போது அங்குள்ள ஊழியர்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 10 ஆண்டுகளுக்கான

(i) நாட்டின் மொத்த உருக்குத்தேவையையும்,

(ii) நாட்டின் சந்தைப் பங்கோடு ஒப்பிடுகையில் மொத்த உள்ளூர் உற்பத்தி யையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0537 / '09

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பிரிட்டிஸ் சிலோன் போப்பரேசன் (BCC) அரசாங்கத்துக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனமாக பொறுப்பேற்கப்பட்ட திகதியையும்,

(ii) பீசீசீ நிறுவனம் 2005 இல் அல்லது 2006 இல் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தினைச் செலுத்தி பணியாளரை விலக்கியதா என்பதனையும்,

(iii) அவ்வாறாயின் செலுத்தப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(iv) அப்போதைய பணியாளர் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தன்னார்வ ஓய்வூதியத் திட்டம் செலுத்தப்பட்ட பின்னர் சிலர் பீசீசீ பணியாளர்களாக மீள சேவைக்கு எடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) 2006 இல் இருந்து 2009 ஓகஸ்ட் 01 வரைக்குமான மாதாந்த அடிப்படையிலான இலாபம் எவ்வனவு என்பதையும்,

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0544 / '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் 19 வது பக்கத்தில் (சிங்கள மொழி மூலம்) குறிப்பிடப்பட்டுள்ள "சமுர்த்தி நிவாரண" நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கான தகமை இருப்பினும் பல தரப்பட்ட காரணங்களினால் உரிமை இழந்துள்ளவர்களை புதிதாக சமுர்த்தி திட்டத்தில் சேரத்துக் கொள்வதன் கீழ் கண்டி மாவட்டத்தில் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0596 / '09

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) புகையிரத பொது முகாமையாளரின் (நிருவாகம்) 2004.10.29 ஆந் திகதிய கடிதத்தின்படி புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளின் சம்பளங்கள் தயாரிக்கும் போது 1996 ஆம் வருடம் முதலாம் வகுப்புக்கு பதவி உயர்வுபெற்ற புகையிரத நிலைய பொறுப்பதிகாரி திரு. K. C. W. R. பெர்னாந்து உட்பட தரப்பினருக்கு 7 சம்பள ஏற்ற முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக ஏற்றுக் கொண்ட போதிலும் அது சீராக்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கௌரவ போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு அமைய இந்த முரண்பாட்டை நீக்குமாறு புகையிரத முகாமையாளருக்கு (நிர்வாகம்) 2008.10.07 ஆம் திகதி மற்றும் 2008.11.09 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல்களும் கட்டளைகளும் வழங்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்கூறியவர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் அது எப்போது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0441 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மாத்தளை மாவட்டத்தில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட விசேட கருத்திட்டங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்கள் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக தனித்தனியாக யாவையென்பதையும் ,

(ii) அக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அக் கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்வதற்கு உத்தேச மாயுள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0400 / '09

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இத்தகைய காணிகளில் எத்தனை நிரப்பு நிலையங்கள் உள்ளன என்பதையும்,

(iii) இவற்றில் ஐ.ஓ. சீ. கம்பனியின் கீழுள்ள நிரப்பு நிலையங்கள் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருப்பதால் புகையிரத திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இற்றைப்படுத்தப்படாத குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

0571 / '09

கௌரவ அர்.பி.ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச ஊழியர்களுக்கு ஆதனக் கடன் வழங்குவதற்கென செயற்படுத்தப்பட்ட விசேட கடன் கருத்திட்டத்தின் மூலம் 2007 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியினால் எவ்வளவு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது,

(ii) ஒவ்வொரு வங்கிக் கிளையின் மூலமும் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு தொகை கடன் வழங்கப்பட்டுள்ளது,

(iii) இக்கடன் திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட உச்ச மட்ட கடன் தொகை மற்றும் வதிக்கப்பட்ட வடடி வீதம் எவ்வளவு,

(iv) தற்போது ஒருவருக்கு வழங்கப்படும் கடன்தொகை மற்றும் அதன் வட்டி வீதம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வட - கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் அரச ஊழியர்களுக்கு இக்கடன் தொகை மந்த கதியில் வழங்கப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு எத்தனை பேர் காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றனர்,

(ii) இவர்களுக்கு தரிதமாக கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0572 / ’09

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடமத்திய மாகாணத்தில் எத்தனை பாடசாலைகள் கல்வி நடவடிக்கை களுக்காகத் திறக்கப்பட்டிருக்கின்றன,

(ii) திறந்திருக்கின்ற பாடசாலைகளில் அதிபர் தரத்திலான எத்தனை அதிபர்கள் இருக்கின்னறனர்,

(iii) எத்தனை பாடசாலைகளில் பதிற் கடமையாற்றும் அதிபர்கள் சேவை யாற்றுகின்றனர்,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இம் மாகாணத்தில் பாடசாலைகளில் அதிபர்களாக சேவையாற்றுவதற்காக அதிபர் தரத்திலான எத்தனை அதிபர்கள் தேவைப்படுகின்றனர்,

(ii) பாடசாலை அதிபர் தரத்தில் I, II, III ஆம் தரங்களுக்குரிய பாடசாலை அதிபர்கள் வெவ்வேறாக எத்தனைபேர் சேவையிலீடுபட்டிருக்கின்றனர்,

(iii) நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iv) பாடசாலை அதிபர்களாகப் பணியாற்றாத அதிபர் தரத்திலான பாடசாலை அதிபர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(v) இவ்வதிபர் தரத்திலானவர்களை பாடசாலை அதிபர்களாக நியமிக்க உரிய நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0597 / ’09

கௌரவ (திருமதி) சுஜாதா அலஹகோன்,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மாத்தளை கொட்டுவேகெதர தேசிய வீடமைப்பு திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது,

(ii) அச்சந்தர்ப்பத்திலிருந்த வீடு பெறுனர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) அவ்வீடு பெறுனர்களுக்குக் கிடைத்த காணிகளின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான எத்தனை வெற்றுக் காணித் துண்டுகள் கொட்டுவேகெதர தேசிய வீடமைப்பு திட்டத்தில் இன்னும் எஞ்சியிருக்கின்றன,

(ii) அவ்வெற்றுக் காணிகளில் எத்தனை துண்டுகளை அகற்றுவதற்காக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது,

(iii) அவ்வெற்றுக் காணித் துண்டுகளுக்கு விண்ணப்பிப்பதற்குப் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் யாவை,

(iv) அக்காணித் துண்டுகளின் அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் முகவரிகளையும், இவர்கள் செலுத்த உடன்பட்ட விலை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0598 / '09

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்துக்குரிய, யாய 15 பி 138 நீர்ப்பாசன காணி அ.க.பி.452/2, 92ஆம் இலக்க 1.022 ஹெக்டயார் பரப்புள்ள காணியை அளந்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை திரு.வலிமுனிகே ஹின்னியாவுக்கு கொடையளிப்பு பத்திரத்தின் மூலம் வழங்கியிருந்தது என்பதையும்,

(ii) அந் நீர்ப்பாசன காணியை பின்னுரித்தாக்காமல், 2007.11.02 ஆம் திகதி திரு.ஹின்னியா இறந்துவிட்டார் என்பதையும்,

(iii) திரு. ஹின்னியாவின் திருமண மனைவியான திருமதி சுதுஹகுறுகே பேபிநோனா இவருக்கு முன்னர் இறந்துவிட்டார் என்பதையும்,

(iv) இவர்கள் இருவரினதும் ஒரே பிள்ளை திரு.டப்ளியு.தேமாரிஸ் ஆவார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு.ஹின்னியாவின் மரணத்தின் பின்னர் இவருக்குரித்தாகவிருந்த மேற்குறிப் பிட்ட மகாவலி நீர்ப்பாசன காணி ஒரே பிள்ளையான திரு தேமாரிசுக்கு உரித்தாக வேண்டும் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) பலமுறை விண்ணப்பித்தும் திரு. தேமாரிசுக்கு இற்றைவரை தனது தந்தையின் நீர்ப்பாசன காணியை வழங்காமைக்கான காரணம் யாது,

(ii) எந்த காலவரையறைக்குள் திரு. தேமாரிசுக்கு சம்பந்தப்பட்ட காணி வழங்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0625 / '09

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு , சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு ,—

(அ) (i) இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எப்போதிருந்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் ,

(ii) அவரது தகைமைகள் யாவையென்பதையும் ,

(iii) அவர் இற்றை வரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(iv) அவ்விஜயங்களுக்காக அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை எவ்வள வென்பதையும் ,

(vi) குறித்த விஜயங்களின்போது இந்நாட்டுக்கு பெற்றுத் தந்துள்ள நன்மைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0245 / '09

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் பிரசாவுரிமை பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) குறிப்பிட்ட இந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்குறிப்பிட்ட நாட்டின் பிரசாவுரிமை எப்பொழுது கிடைத்ததென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0456 / '09

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரிக்கும் கேள்விப் பத்திரத்துக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த தரப்பினர்களின் பெயர், முகவரிகள் யாவை,

(ii) அக்கேள்விப்பத்திரதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்கள் யாவை,

(iii) சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரத்தை ஒப்படைத்த கம்பனிக்கு கேள்விப்பத்திரம் ஒப்படைக்கப்பட்ட திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட கம்பனி புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரிப்பதற்காக ஈடுபடுத்திய மூலதன முதலீடு எவ்வளவு,

(ii) வழங்கப்படவிருக்கும் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு முன்னர் பயன்படுத்திய சாரதி அனுமதிப் பத்திரம் ஒன்றுக்கு சம்பந்தப்பட்ட கம்பனிக்கு மோட்டார் வாகன திணைக்களம் செலுத்திய பணம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0457/ '09

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (தொழில் நுட்பம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்கின்றபோது இருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள் யாவை?

(ii) இன்றிருக்கும் உதவி ஆணையாளர் (தொழில் நுட்பம்) பதவி வெற்றிடமாக இருந்தபோது அதற்காக விண்ணப்பித்த மோட்டார் வாகன பரிசோதகர்களின் பெயர், முகவரிகள் யாவை,

(iii) இவர்களின் தகைமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற் குறிப்பிட்ட பதவிக்கு ஆகக் கூடிய தகைமையிருந்த நபரை ஆட்சேர்ப்பு செய்திருக்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆகக் கூடிய தகைமையுள்ள நபர்களுக்கு அப்பதவியை வழங்க உரிய நடவடிக்கை எடுப்பாரா,

(ii) ஆமெனில், எப்பொழுது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஒற்றோபர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0459 / '09

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக பெரும் பொறுப்புள்ள தொழிலான சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றபோது அது மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சாரதி அனுமதிப் பத்திரமொன்றைத் தயாரிக்கும் கேள்விப்பத்திரத்தை ஒப்படைக்கின்றபோது சம்பந்தப்பட்ட கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புடனிருக்க வேண்டும் என்பதையும்,

(ii) புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை தயாரிக்கும் கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனியின் தலைவர், நிதி மோசடி தொடர்பில் தென்னாபிரிக்காவின் நீதிமன்றமொன்றினால் 15 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபராவார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

O460 / '09

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் (தொழில்நுட்ப ) பதவிக்கான ஆட் சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) ஆமெனில் அது எப்போதென்பதையும் ,

(iii) அவ்வாறு திருத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி திருத்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட பதவிக்கான ஆட் சேர்ப்பு நடைமுறையானது மோட்டார் வாகன பரிசோதகர்களின் பதவி உயர்வுக்கான நடைமுறையாகும் என்பதையும் ,

(ii) பதவி உயர்வுக்கான நடைமுறையாக இருப்பின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.4 மற்றும் 2.5 வாசகங்களுக்கேற்ப மோட்டார் வாகன ஆணையாளரினால் அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா ?

(இ) (i) ஆமெனில், குறிப்பிட்ட அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) அது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) குறித்த அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவில்லையெனில் ஆட்சேர்ப்பு நடைமுறை சட்ட விரோதமானதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(உ) (i) ஆமெனில், அதற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் ,

(ii) அது எவ்வளவு காலத்துக்குள் நடைபெறும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

0461 / '09

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போதைக்கு வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) அப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பின் போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை யாதென்பதையும் ,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றனவா என்பதையும் ,

(iv) ஆமெனில் எந்தக் காலகட்டத்திலென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகள் பெற்றுக்கொண்டவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0158 / '09

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ மகாவலி புதிய அபிவிருத்தி வலயத்துக்குள் 2004 தொடக்கம் 2009.03.31 வரை காணித்துண்டுகள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் எவ்வளவு என்பதையும்,

(ii) காணித்துண்டுகள் வழங்கப்பட்டோர் தெரிவு செய்யப்பட்ட எடுகோல்கள் மற்றும் வழங்கப்பட்ட மொத்த காணியின் அளவு மேட்டுநிலம் / நீர்ப்பாசன காணிகள் என்ற ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் காணிகள் வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனிப்பட்ட தொழில் முயற்சிகளுக்காக கம்பெனிகள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அதற்கு விண்ணப்பித்த கம்பெனி / நிருவனத் தலைவரின் பெயர் மற்றும் முகவரி என்ன என்பதையும்,

(iii) அந்தக் காணிகளை வழங்க இருக்க வேண்டிய தகமைகள், எடுகோல்கள், காணிகள் வழங்கப்பட்ட திகதி, மற்றும் வழங்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) வழங்கப்பட்ட காணிகள் எந்தெந்த நடவடிக்கைகளுக்கு எந்தக் கால வரையறை வரை வழங்கப்பட்டன என்பதையும்,

(v) அந்த காணிகள் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்,

(vi) அதன் தற்போதைய நிலமை என்ன என்பதையும், ஒவ்வொரு காணிகள் தொடர்பாக வெவ்வேறாக

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2009.03.31 ஆந் திகதியன்று வரை பகிர்ந்தளிப்பதற்காக (மேட்டு / நீர்ப்பாசனம்) மீதியாக உள்ள காணியின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) கட்டாயம் காணி வழங்கப்பட வேண்டியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்,

(iii) அவ்வாறெனின் அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) எந்த காலப்பகுதிக்குள் அவர்களுக்கு காணிகள் வழங்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0172 / '09

கௌரவ விஜித ரணவீர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திருமதி எம். எம். சுமணாவதி அவர்கள், மாத்தறை தீயகக மேற்கு மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி, 1991.01.01 ஆம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளளார் என்பதையும்,

(ii) 1988.01.01 ஆம் திகதியிலிருந்து திறன் மற்றும் மூப்புரிமை அடிப்படையில் இவருக்கு அதிபர் தரம் II இற்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென் பதையும்,

(iii) இருப்பினும் இவர் ஓய்வுபெறும் வரை உரிய பதவி உயர்வு வழங்கப்பட வில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஓய்வுபெற்று கடந்த 18 வருட காலப்பகுதியில் திருமதி சுமனாவதியின் பதவி உயர்வையும் ஓய்யூதியத்தையும் தயாரித்து கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி பதவி உயர்வு மற்றும் ஓய்வூதியம் என்பவை தயாரித்துக் கொடுக்கப் படாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) சகல தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ள திருமதி சுமனாவதிக்கு உரிய பதவி உயர்வைப் பெற்றுக் கொடுத்து எப்போது ஓய்வூதியம் தயாரித்து வழங்கப் படும் என்பதையும்,

(iii) 78 வயதைக் கொண்ட இவருக்கு, உரிய திணைக்களத்தின் தாமதத்தின் காரணமாக பதவி உயர்வும் அதற்கான ஓய்வூதியமும் வழங்கப்படாத காலப் பகுதிக்கு நட்டஈட்டுத் தொகையோ வேறு ஏதேனும் கொடுப்பனவோ வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0545 / '09

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 19 வது பக்கத்தில் (சிங்களமொழி மூலம்) குறிப்பிடப்பட்டுள்ள 'சமுர்த்தி நிவாரண' நிகழ்ச்சித்தி திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளவாறு வயொதிப, மற்றும் அங்கவீனமடைந்த குடும்பங் களுக்கு 3,000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுவதன் கீழ் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் வயோதிபர்கள் மற்றும் அங்கவீனமடைந்தவர்கள் எவ்வளவு பேர் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளார்கள் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் கண்டி மாவட்டத்தில் அவ்வாறு இனங் காணப்பட்ட வயோதிப மற்றும் அங்கவீனமடைந்த குடும்பங்களில் எத்தனை குடும்பங்களுக்கு இந்த 3,000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0177 / '09

கௌரவ விஜித ரணவீர,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாதோட்டை மாவட்டத்தில் குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து நடத்தப்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட தச்சுத்தொழில் கொட்டகைகளின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களின் பெயர், முகவரி, கிராம அலுவலர் பிரிவு, பிரதேசச் செயலாளர் பிரிவு, உரிய பிரதேச சபை, பதிவு இலக்கம், தொழிலின் இயல்வபு ஆரம்பித்த ஆண்டு ஆகியவை வெவ்வேறாக யாவை,

(iii) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களை உபயோகித்து தொழிலில் ஈடுபடும் அனைத்து தச்சுத் தொழிலாளர்களும் சுற்றாடல் உரிமப் பத்திரத்தை வருடாந்தம் பெறவேண்டுமா,

(v) சுற்றாடல் உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை மற்றும் செலவிட வேண்டிய முழுத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குதிரை வலு 03 க்குக் குறைந்த பல்தொழில் இயந்திரங்களுக்கான சுற்றாடல் வரி அறவீடு எப்போது முதல் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இவ்வரியை செலுத்தியோர் எண்ணிக்கை யாது,

(iii) தச்சுத் தொழிலாளர்களுக்கு பெரும் செலவுச் சுமையாக உள்ள இவ்வரியை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0627 / '09

கௌரவ எம் ஜோசப் மைக்கல் பெரேரா,— தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அப்போதைய தொழில் உறவுகள் ,வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சரினால் 1980 யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நெசவுத் தேரழிலாளர்களின் நிலுவைச் சம்பளம் செலுத்துதல் தொடர்பில் 06/1540/230/039 ஆம் இலக்க, 2006.08.18 ஆம் திகதிய அமைச்சரவை நிருபம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நிதி ,திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பின் கீழ் அந்த நிருபம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தும் படி தெரழில் உறவுகள் மனித வலு அமைச்சுக்கு (அப்போதைய தொழில் உறவுகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு) பணிப்புரை வழங்கப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(இ) அதன் பிரகாரம், 2006 டிசெம்பர் மாத்ததின் ஆரம்பப் பகுதியில் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதாக, தொழில் ஆணையாளர் நாயகத்தினால் சரியான உரிமையாளர்கள் இணங்காணப்பட்டு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக நிலுவைச் சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சத்தியக் கடுதாசிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாறு சம்பளம் வழங்குவதற்குள்ள சத்தியக் கடுதாசிகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) அவர்களது பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும் ,

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(உ) (i) மேற்படி விடயங்களுக்கேற்ப குறித்த நெசவுத் தொழிலாளர்களின் நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

0628 / '09

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மாத்தளை – மன்தண்டாவெல - பன்சாலை வீதி 20/10 ஆம் இலக்க தொழிலாளர் வீடுகளில் சுமார் 50 ஆண்டுகளாக குடியிருக்கின்ற 03 குடும்பங்களுக்கு அவ் வீடுகளிலிருந்து வெளியேறும்படி கட்டளையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிலாளர்களாக கடமையாற்றிய இவர்கள் கடந்த காலத்தில் தமது செலவில் இவ் வீடுகளை திருத்தி, நீர், மின்சாரம் பெற்று கட்டணப் பட்டியல்களையும் செலுத்தியுள்ளார்கள் என்பதோடு வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) இவர்களுக்கு நியாயம் வழங்கி தொடர்ந்தும் மேற்படி வீடுகளில் குடியிருப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

0704 / '09

கௌரவ எல். ஜீ. வசந்த பியதிஸ்ஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டுக்காக கிழக்கு மாபாண சபைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்து என்பதையும்,

(ii) அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தில் அம்பாறை மாவட்டத்துக்கு எவ்வளவு பணம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0731/ '09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு, கம்பஹ, களுத்துறை மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட மேல் மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2009, ஒற்றோபர் 20, செவ்வாய்க்கிழமை)**

0732/ '09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பதுளை, மொனராகலை மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட ஊவா மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0733 / '09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பொலனறுவை, அநுராதபுரம் மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட வட மத்திய மாகான தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0734 / '09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கண்டி, நுவரெலியா மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட மத்திய மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0735 / '09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட சப்பரகமுவ மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0736 / ’09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புத்தளம், குருநாகல் மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட வயம்ப மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0737 / ’09

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்காக நடத்தப்பட்ட கிழக்கு மாகாண சபை தேர்தலின்போது எத்தனை தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) இவ்வாறு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குப் பதிலாக நிரந்தர அடையாள அட்டைகளை வழங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்,

(iv) நிரந்தர அடையான அட்டைகளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதையும்,

(v) இந்த நடவடிக்கையை பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2009, ஒற்றோபர் 21, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0489 / '09

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு , பொதுமக்கள் பாதுகாப்பு ,சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நட்ட ஈட்டு உரிமை பெறுவதற்குள்ள பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(ii) நட்ட ஈட்டு உரிமையாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈட்டு உரிமை வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iv) நட்டஈட்டு உரிமை வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0224 / '09

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "பெத்தடீன்" ஊசிமருந்தை இந்நாட்டுக்கு கொண்டு வருவதற்கான கட்டளை அனுப்பப்பட்டது எப்போது என்பதையும்,

(ii) அதன் அளவு எவ்வளவென்பதையும் ,

(iii) "பெத்தடீன்" ஊசிமருந்து அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டது எப்போதென்பதையும்,

(iv) பயன்படுத்தாமல் எஞ்சியுள்ள "பெத்தடீன்" ஊசி மருந்துகளின் அளவு எவ்வளவென்பதையும் ,

(v) "பெத்தடீன்" ஊசிமருந்து வீணாக்கப்பட்டதால் ஏற்பட்ட நிதிசார் நஷ்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) "மோப்பீன்" ஊசிமருந்து இந்நாட்டுக்கு கொண்டுவருவதற்கான கட்டளை அனுப்பப்பட்டது எப்போதென்பதையும் ,

(ii) அதன் அளவு எவ்வளவென்பதையும் ,

(iii) "மோப்பீன்" ஊசிமருந்து அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டது எப்போதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்

0205 / ' 09

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வெளிநாட்டு மீன்பிடிப்படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படும்போது மீன்கள் தரப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 செப்டம்பர் மாதத்திலும் 2006 மே மாதத்திலும் 2008 டிசம்பர் மாதத்திலும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படுகையில் மூன்றாம் தர மீன் ஒரு கிலோகிறாமுக்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் அறவிட்ட தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2009, ஒற்றோபர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0217 / '09

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009 சனவரி மாதத்தில் ஜப்பான் அரசாங்கத்தின் வெளிநாட்டு பிரதிநிதி திரு.யசுசி அகாஷி இலங்கைக்கு வருகை தந்தாரா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) திரு.யசுசி அகாஷி இலங்கைக்கு வந்தது இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலா,

(ii) ஆமெனில், அவ்வாறு அழைப்பு விடுத்தவர் யார்,

(iii) இவர் மேற்குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடிய விடயம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---